செ.வெ.எண்.67 நாள்.05.02.2018.

# இருவார கோழிக்கழிச்சல் தடுப்பு முகாம்

இருவார கோழிக்கழிச்சல் தடுப்பு முகாம் தமிழகத்தில் ஒவ்வொரு வருடமும் பிப்ரவரி 9 முதல் 22 முடிய இரண்டு வாரங்கள் கோழிக்கழிச்சல் தடுப்பூசி முகாம் நடத்தப் படுகிறது.

கோழிக்கழிச்சல் நோய் என்பது கோழிகளை தாக்கும் ஒரு விதமான வைரஸ் நோய். இந்நோய் கண்ட கோழிகளில் இறப்பு நேரிடலாம். இந்த நோய்க்கு சிகிச்சை இல்லை. தடுப்பூசி போடுவதன் மூலம் தான் இந்த நோயை தடுக்க இயலும். இந்த தடுப்பூசி அனைத்து கால்நடை மருந்தகங்கள் மற்றும் கால்நடை கிளைநிலையங்களில் வாரா வாரம் இடப்படுகிறது. வருடம் ஒரு முறை சிறப்பு முகாமாக இருவார கோழிக்கழிச்சல் தடுப்பூசி முகாம் அனைத்து கிராமங்களில் நடத்தப்படுகிறது. பொதுமக்கள் இந்த முகாமினை நல்ல முறையில் பயன்படுத்தி தங்கள் கோழிகளுக்கு கோழிக்கழிச்சல் தடுப்பூசி இட்டு கோழிக்கழிச்சல் நோயிலிருந்து தங்கள் கோழிகளை காப்பாற்றி பொருளாதார முன்னேற்றம் அடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.